

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 13.12.2024 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று முன்தினம் (18.12..2024), ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில், அத்திருகோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொள்ளாச்சி கிளை மேலாளரிடம் ஒப்படைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி ஏ.கேத்ரின் சரண்யா, இணை ஆணையர்கள் இரா.வான்மதி. பி.இரமேஷ், துணை ஆணையர் விஜயலட்சுமி. உதவி ஆணையர் கைலாசமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் முரளி கிருஷ்ணா, மற்றும் அறங்காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

# ‘ஒரே நாடு-ஒரே தேர்தல்’ ஜனநாயகத்தின் குரல்வலையை நெரிக்கும் செயல்!

## பொன்னமராவதியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, டிச. 20-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி தனியார் திருமண மண்டபத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகித்தார். பொன்னமராவதி பேரூராட்சி செயலாளர் அ.அழகப்பன், பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கலமணி ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்.

தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, பார்கவி, மாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய தமிழக சட்டத்துறை அமைச்சர் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் 23ஆம் புலிகேசி திரைப்படத்தை யாராலும் பார்த்ததுண்டா என கேள்வி எழுப்பி, 23ஆம் புலிகேசியின் வாரிசு எடப்பாடி பழனிச்சாமி, இன்று எல்லோரும் பார்த்து நக்கலும், கேலியும் கிண்டலும் செய்யக்கூடிய அரசியல் தலைவராக எடப்பாடி பழனிச்சாமி இருப்பதாகவும் அந்த கட்சி தான் ஆட்சியைப் பிடிக்கப் போகிறதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

தலை சரியில்லை என்றால் வால் சரி இருக்காது. எதுவும் சரி இருக்காது எனவும், முதல்வர் தளபதி அவர்களை நம்பி தி.மு.க. இருக்கிறது.

ஆனால் பழனிச்சாமியை நம்பி அ.தி.மு.க. இல்லை எனவும், எங்களை எதிர்த்து நிற்பவர்கள் வலுவாக இருக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால் அங்கு சின்னா பின்னம் ஆகி கிடக்கிறது. எதிரிகள் தனித்தனியாக வந்தாலும் சரி, சேர்ந்து வந்தாலும் சரி அவர்களை வெல்லக் கூடிய சக்தி திராவிட முன்னேற்ற கழகத்திற்கு இருக்கிறது என தெரிவித்தார். ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து பேசிய அமைச்சர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சி ஐந்தாண்டுகள் ஆட்சி செய்ய வேண்டும் அதை திருத்தி எழுதுவதாக கூறுகிறார்கள்.

அவ்வாறு திரித்து எழுத மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. ஆனால் பாரதிய ஜனதா கட்சி நிதீஷ் குமார் மற்றும் சந்திரபாபு நாயுடு தயவால் ஆட்சி அமைத்துக் கொண்டு ஏதோ கோலுமால் செய்து சட்டத்தை நிறைவேற முயற்சிக்கிறார்கள். இது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல் எனவும் எந்த சட்டமுமே எதிர்ப்பவர்களை வெளியேற்றி விட்டு நிறைவேற்றுவதே பாரதிய ஜனதா கட்சி 10 ஆண்டுகளாக வழக்கமாக செய்து வருகிறது எனவும் நிபந்தனையுடன் ஆதரவு தெரிவித்த நிதீஷ் குமாரும் சந்திரபாபு நாயுடுவும் ஒரே நாடு ஒரே தேர்தலை திட்டத்தை ஆதரிக்கிறார்களா என பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

சாத்தனூர் அணையை திறந்து விட்டது தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி விமர்சித்து இருக்கிறார் நாங்கள் ஒன்றும் செம்பரம்பாக்கம் ஏரியை போல இரவோடு இரவாக திறந்து விட்டு மக்களை பாதிப்புக் குள்ளாக்கவில்லை. ஏரி திறப்பது குறித்து முன் கூட்டியே அறிவித்து படிப்படியாக திறந்தோம். அதனால் தான் எந்த ஒரு உயிர் சேதமும் அங்கு ஆகவில்லை என தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.



இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், பொன்னமராவதி வடக்கு ஒன்றிய செயலாளர் அ.முத்து, ஒன்றிய பெருந்தலைவர் சுதா அடைக்கலம் மணி, பேரூராட்சி தலைவர் சுந்தரி அழகப்பன், பேரூராட்சி துணைத்தலைவர் வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வேந்தன்பட்டி இளைய ராஜா, ஆலவயல் ராமு, சீமாட்டி அப்துல்லத்தீப், ஆலவயல் முரளி சுப்பையா, ஆலவயல் சுவாமிநாதன்,

முத்தையா, கோவை ராமன், கருணாநிதி, சுரேஷ், சோலை செல்வம், நாகராஜ், உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### திருப்பூரில் புற்று நோய் சிகிச்சை மையம் அமைப்பதற்கு

# தனது சொந்த நிதியிலிருந்து ரூ.12.50 இலட்சத்திற்கான காசோலை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், டிச.20-

திருப்பூரில் புற்று நோய் சிகிச்சை மையம் அமைப்பதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.12.50 இலட்சத்திற்கான காசோலையினை திருப்பூர் ரோட்டரி பொது நல அறக்கட்டளை தலைவர் ஆ.முருகநாதனிடம் வழங்கினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் புற்று நோய் சிகிச்சை மையம் தொடர்பான பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் 13.12.2024 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் புற்று நோய் சிகிச்சை மையம் தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் ரா.பால சுப்பிரமணியம், பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் செந்தில்குமரன், திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முருகேசன், துணை தலைவர் திருப்பூர் ரோட்டரி பொது நல அறக்கட்டளை அ.கார்த்திகேயன், செயலாளர் இளங்குமரன், பொருளாளர் அருள் செல்வம், ரோட்டரி சங்க நிர்வாகிகள் ஆர்.தாமோதரன், ஆனந்த ராம், சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அம்பேத்கரை விமர்சித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவை

# எடப்பாடி பழனிசாமி கண்டிக்காதது ஏன்?

## அமைச்சர் கோவி.செழியன் கண்டனம்!

சென்னை, டிச. 20-

தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவர் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வெளியிட்ட சமூக வலைதள பதிவு வருமாறு:

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களை, #INDIA கூட்டணி உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துச் சனநாயகச் சக்திகளும் கண்டித்திருக்கும் வேளையில், அ.தி.மு.க. தலைமை மவுனம் காப்பது ஏன்?

அண்ணல் அம்பேத்கரை விமர்சித்த அமித்ஷாவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேரடியாக கண்டிக்காதது ஏன்?

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அமித்ஷா அவர்களுடன் சேர்ந்து அண்ணல் அம்பேத்கரை அவமதிக்கிறாரா? இல்லை அமித்ஷாவின் கருத்தை ஆமோதிக்கிறாரா?

அண்ணா. தி.மு.க., அமித்ஷா.தி.மு.க. என மாறிவிட்டதால்தானே அண்ணல் அம்பேத்கர் விஷயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமைதி காக்கிறார்.

மீண்டும் பா.ஜ.க.வோடு கூட்டணி சேரும் முயற்சிகளில் அவர் மும்முரமாக இருக்கிறார்.

“அ.தி.மு.க. அழியாமல் இருக்க வேண்டுமென்றால், பா.ஜ.க. கூட்டணிக்கு வர வேண்டும்” என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் கருத்து தெரிவித்திருந்தார்.

“அ.தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைப்பீர்களா?” என்ற கேள்விக்கு “இல்லை” என்று பதில் சொல்லாமல் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, “பொறுத்திருந்து பாருங்கள்” என சிக்னல் காட்டியிருக்கிறார்.

அதனால்தான், கூட்டணிக்கு எங்கேயும் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக அம்பேத்கர் அவமதிப்பைக் கண்டிக்கத் துணிவில்லாமல் இருக்கிறாரா எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள்!

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்துப் போராட்டம்!

## பெரம்பலூரில் பொன்.குமார் அறிவிப்பு

பெரம்பலூர், டிச.20-

ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளதாக அதன் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவருமான பொன்.குமார் பெரம்பலூரில் தெரிவித்தார்!

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி மற்றும் தமிழக கட்டுமான அமைப்புச்சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் உலக புலம்பெயர்வோர் தின நிகழ்ச்சி மற்றும் மாவட்ட பொதுக்குழு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றது.

அதன் அமைப்புச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன்.குமார், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.

அப்போது தமிழக அரசின் சார்பில், தொழிலாளர்களுக்கும் கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் நல வாரியம் ஏற்படுத்தி நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதையும், தமிழக அரசின் சாதனைகளையும் பட்டியலிட்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன்.குமார், தமிழகத்திலிருந்து பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏராளமான தொழிலாளர்களும், படித்த இளைஞர்களும் வேலைக்காக வேண்டி புலம் பெயர்ந்துள்ளனர். அவ்வாறு செல்பவர்களை அதன் ஏஜெண்டுகள் சுற்றுலா விசாவில் அழைத்துச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கி அவர்களை சிரமத்திற்கு ஆளாக்கி வருகின்றனர்.



மேலும் அவர்களுக்கு பேசப்பட்ட சம்பளத்தையும் கொடுப்பதில்லை, விசாவை வாங்கி வைத்துக் கொண்டு சொந்த ஊருக்கும் அனுப்பி வைப்பதில்லை. அதனால் அவர்களது குடும்பமும் பாதிக்கப்படுகிறது.

இதற்காக தமிழகத்தில் உள்ளதை போல வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு பல்வேறு விதமான உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக டிசம்பர் 18 ஆம் தேதி உலக புலம்பெயர்வோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதையே நாம் இன்று கொண்டாடி வருகிறோம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டிற்கு பல லட்சம் கோடி அந்நிய செலாவணி வருமானம் வருகிறது. ஆனால் அவ்வாறு அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தொழிலாளர்களுக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் 1983 &ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான சட்டத்தில் பல்வேறு திருத்தங்களை கொண்டு வர உள்ளதாக மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளாக கூறி வருகிறார்கள். ஆனால் அதனை அவர்கள் செயல்படுத்தவில்லை. எனவே இதனைக் கண்டித்து விரைவில் மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம் என்று தெரிவித்தார்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட தூரம்பாடி , கருப்பணவலசு, எரசினம்பாளையம், வேளாம்பூண்டி, கோட்டை மருதூர், எம்.குமாரபாளையம் ஊராட்சிகள் மற்றும் கன்னிவாடி பேரூராட்சிகளில் பல்வேறு பணிகளை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு துணைத் தலைவர் ப.பழனிசாமி, பேரூர் செயலாளர்கள் பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி மூலனூர், கோ.சுரேஷ் கன்னிவாடி, எம்.குமாரபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் நா.செல்லமுத்து உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# தஞ்சை தெற்கு மாவட்டம் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தஞ்சை தெற்கு மாவட்டம், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எச்.அஸ்லம் அவர்கள் அதிராம்பட்டினம் மேற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

**தஞ்சை தெற்கு மாவட்டம்**, **பொருளாளர் பொறுப்புக்கான** தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, டிசம்பர் 22 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தஞ்சை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ -வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 18.
நாள்: 18 - 12- 2024.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆந்திரா கே.ஏ.முனுசாமி
### டிசம்பர் 20 (2016)



**எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.**

**ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.**

**2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**